[2010 ஏப்ரல் 26

முற்பகல் 9-45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 93, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞா. ஜாண் ஜோசப், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

93—

கல்லூரி

***74885—திரு. ஞா. ஜாண் ஜோசப்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் அரசுக் கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தில் அரசுக் கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞா. ஜாண் ஜோசப்.

திரு. ஞா. ஜாண் ஜோசப்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம் கல்வியில் முன்னிலை வகிக்கக்கூடிய மாவட்டம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது நாடு பூராவும் தெரியும். நீங்கள் கேள்வியை மட்டும் கேளுங்கள்.

திரு. ஞா. ஜாண் ஜோசப்: கேள்வியை மட்டும் கேட்கின்றேன். எனினும், அந்த மாவட்டம் சமூகப் பொருளாதார ரீதியில் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளது. சமீபத்தில் மத்திய அரசும் இதைச் சுட்டிக்காட்டியிருக்கின்றது. அந்த மாவட்டத்தில் ஆண்டுதோறும் சுமார் 25 ஆயிரம் மாணவ, மாணவிகள் +2 தேர்வில் தேர்ச்சி பெற்று வெளியிலே வருகின்றார்கள். இவர்களில் அநேகம் பேர்

2010 ஏப்ரல் 26]

ஏழைக் குடும்பங்களைச் சார்ந்தவர்களாக இருக்கின்றார்கள். ஆகவே சுயநிதிக் கல்லூரிகள் கேட்கும் கட்டணத்தைச் செலுத்த முடியாமல், பாதிக்கு மேற்பட்ட மாணவர்கள் உயர் கல்விக்குச் செல்ல முடியாமல், பாதியிலேயே தங்கள் படிப்பை நிறுத்திவிடக்கூடிய நிலை இருக்கின்றது. இவற்றையெல்லாம் கருத்தில்கொண்டு, இந்த மாவட்டத்தில் அரசின் சார்பில் கலை மற்றும் அறிவியல் கல்லூரி இல்லாத நிலையில், ஒரு கல்லூரியைத் தொடங்கவேண்டும். அதனை மாவட்டத்தின் மேற்குப் பகுதியில், குறிப்பாக மாவட்டத்தின் மிக முக்கியமான கல்வி மையங்களில் ஒன்றாகத் திகழக்கூடிய மார்த்தாண்டம் பகுதியை ஒட்டி, தேவிகோடு ஊராட்சிக்குச் சொந்தமான புன்னாக்கரை என்ற ஊரில்—அங்கே 25 ஏக்கர் பூமி இருக்கின்றது. ஆகவே, இடம் குறித்த பிரச்சினை இருக்காது. இவற்றையெல்லாம் கருத்தில்கொண்டு, அந்தப் பகுதியில்—அரசுக் கலை மற்றும் அறிவியல் கல்லூரியை அமைக்க, அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களே கல்வியில் முன்னிலை வகிக்கக்கூடிய மாவட்டம் என்பதை ஏற்றுக்கொண்டிருக்கின்றார்கள். ஆகவே, சவலைப் பிள்ளைகளுக்குத்தான் முதலில் சலுகை கொடுக்கவேண்டுமே தவிர, நன்றாக இருக்கின்ற பிள்ளைகளுக்கு அவ்வளவு முன்னுரிமை கொடுக்க வேண்டிய அவசியமில்லை. கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரை, அங்கே 22 கல்லூரிகள் இருக்கின்றன. அவற்றிலே 12 அரசு உதவி பெறும் கல்லூரிகள் உள்ளன. 10 தனியார் கல்லூரிகள் உள்ளன. 6 தொகுதிகள் மட்டுமே இருக்கின்ற உங்கள் மாவட்டத்தில் 22 கல்லூரிகள் இருக்கின்றன. தமிழ்நாடு முழுவதும் மொத்தமாக 132 அரசு உதவி பெறும் கல்லூரிகள்தான் இருக்கின்றன. அவற்றில் 12 கல்லூரிகள் கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கின்றன. எங்கள் மாவட்டத்தில் 12 தொகுதிகள் இருக்கின்றன. ஆனால் நீங்கள் பார்த்தீர்களானால், அரசு உதவி பெறும் கல்லூரிகள் மற்றும் தனியார் கல்லூரிகள் என்று எல்லாவற்றையும் சேர்த்துப் பார்த்தால் 7 கல்லூரிகள்கூட இல்லை. அதனால் முதலிலே பின்தங்கிய மாவட்டங்களுக்கு முன்னுரிமை கொடுத்து, தலைவர் கலைஞர் அவர்களுடைய அரசு,

கல்லூரிகளைப் பல்கலைக்கழகங்களின் மூலமாகத் திறந்திருக்கின்றது. இருந்தாலும்கூட, உங்கள் மாவட்ட அமைச்சர் வைத்த வேண்டுகோளுக்கிணங்க, சென்ற ஆண்டு அரசின் சார்பிலே உங்கள் மாவட்டத்தில் அண்ணா பொறியியல் கல்லூரி திறக்கப்பட்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞா. ஜாண் ஜோசப்.

திரு. ஞா. ஜாண் ஜோசப்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டதைப்போன்று கல்லூரிகள் இருக்கின்றன என்பது உண்மைதான். ஆனால், அவையெல்லாம் சுயநிதிக் கல்லூரிகள். குறிப்பாக, 1980 ஆம் ஆண்டுக்குப் பிறகு அந்த மாவட்டத்தில் அரசு உதவி பெறும் கல்லூரிகள் திறக்கப்படவில்லை. தற்போது தொடங்கப்படும் பாடப் பிரிவுகள்கூட—அரசு உதவி பெறும் கல்லூரிகளாக இருந்தாலும், புதிய பாடப் பிரிவுகள் தொடங்கினால், அந்தப் பாடப் பிரிவுகள்—முழுக்க முழுக்க சுயநிதிப் பாடப் பிரிவுகளாகவே இருக்கின்றன. ஆகவேதான், ஏழை மாணவர்கள் உயர் கல்விக்குச் செல்ல முடியாத நிலை இருக்கின்றது என்பதை இங்கே நான் குறிப்பிட்டேன். எனவே, இந்த விஷயத்தில் முன்னுரிமை கொடுத்து. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஞா. ஜாண் ஜோசப், அரசு மறுபரிசீலனை செய்யுமா என்று கேட்டுவிட்டு உட்காருங்கள். மற்ற உறுப்பினர்கள் supplementary questions கேட்க வேண்டும்.

திரு. ஞா. ஜாண் ஜோசப்: எனவே, முன்னுரிமை அடிப்படையில் அந்தப் பகுதியில் அரசுக் கலை மற்றும் அறிவியல் கல்லூரியினைத் தொடங்க வேண்டுமென்று கேட்பதுடன், என்னுடைய தொகுதிக்குட்பட்ட மார்த்தாண்டம் நேசமணி நினைவு கிறித்துவக் கல்லூரியிலும், தூத்தூர் புனித யூதா கல்லூரியிலும் கடந்த மூன்றாண்டுகளாக ஓய்வுபெற்ற பேராசிரியர் பணியிடங்கள் காலியாக இருக்கின்றன. அவற்றையும் நிரப்புவதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

2010 ஏப்ரல் 26]

முற்பகல் 9-50

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசாங்கம் 27 அறிவியல் கலைக் கல்லூரிகளைத் துவக்குவதற்கு அனுமதி அளித்திருக்கிறது. அவர்கள் நிதியுதவி வழங்குகிறார்கள். அதில் 6 கல்லூரிகளை என்னுடைய மானியக் கோரிக்கையில் அறிவித்து இருக்கிறேன். அந்த 27 மாவட்டங்களிலே, கன்னியாகுமரிக்கும் தமிழகத்தின் மூலமாகப் பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது. அந்த மாவட்ட ஆட்சித் தலைவரின்மூலமாக நிலம் கிடைப்பதற்கு நீங்கள் ஏற்பாடு செய்வீர்களேயானால் வருகிற காலங்களில், கன்னியாகுமரி மாவட்டத்தில் அரசுக் கல்லூரி ஒன்றை உருவாக்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும். அதுமட்டுமல்ல; மேலும், நீங்கள் கோரியிருக்கிறபடி, மானியக் கோரிக்கையிலே சொல்லியிருக்கிறேன், தனியார் கல்லூரிகளிலேயும், அரசு உதவிப் பெறும் தனியார் கல்லூரிகளிலேயும் அதிக பேராசிரியர்களை நியமித்தது இந்த 2, 3 ஆண்டுகளிலேதான், கலைஞர் ஆட்சியிலேதான் நியமித்திருக்கிறோம் என்று. இதுபோன்று குறைகள் இருக்குமானால், உடனடியாக இந்த ஆண்டு பேராசிரியர்களை நிரப்புவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ. சுப்பிரமணியம்.

திரு. ஓ. சுப்பிரமணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு சார்பிலோ, தனியார் சார்பிலோ, கல்லூரி இல்லாத என்னுடைய பவானிசாகர் தொகுதியில், கல்லூரி அமைக்க மத்தியத் தொலைத் தொடர்புத் துறை அமைச்சர் மாண்புமிகு அண்ணன் திரு. ஆ. ராசா அவர்கள் வசூல் செய்து ஒரு கோடி ரூபாய் கட்ட சம்மதித்துள்ளார்கள். இட வசதியும் உள்ளது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பவானிசாகர் தொகுதியில் கல்லூரி அமைத்துத் தர முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட வாரியாக கணக்கெடுத்துதான் நாம் இப்பொழுது நிரப்பிக் கொண்டிருக்கிறோம். எந்தெந்த

மாவட்டங்களிலே அரசுக் கல்லூரிகள், தனியார் கல்லூரிகள் இல்லையோ, அந்த மாவட்டங்களுக்கு முன்னுரிமை கொடுத்து செய்திருக்கிறோம். இங்கே இருக்கிற 234 தொகுதிகளின் சட்டமன்ற உறுப்பினர்களுமே, தங்கள் தொகுதிக்கு அரசுக் கல்லூரி வேண்டுமென்று கோரிக்கை வைத்துக்கொண்டுதான் இருக்கிறார்கள். ஆகவே, நிதிநிலையைப் பொறுத்து, வருங்காலங்களிலே அவை பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 94, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். அன்பழகன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

94—

கட்டட வசதி

***45060—திரு. எம். அன்பழகன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனி தொகுதி, பழனி மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியுடன் திருத்திய விடையைப் படிக்கின்றேன்.

(அ) மற்றும் (ஆ) பழனி மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்திற்குக் கட்டடம் கட்டும் கருத்துரு இருக்கிறது. இடம் கிடைத்தவுடன் கட்டடம் கட்டித் தரப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். அன்பழகன்.

திரு. எம். அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருத்துரு இருக்கிறது என்று சொன்னதற்காக மிகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பழனி, ஆயக்குடி பேரூராட்சிக்குச்